இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 10 | இதழ் : 39 | ஆகஸ்ட் | 2024 | Vol.: 10 | Issue: 39 | August | 2024

# நாவுக்கரசர் சமண சமயம் தொடர்பு பற்றிய கதைகளும் முரண்களும் Stories and Contradictions of Navukkarasar Jain religion

**ஆ. சந்திரன் | A. Chandiran**[1]ORCID

[1] உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். Assistant professor, Department of Tamil PG & Research, Sacred heart college (Autonomous), Tirupattur, Tirupattur Distirct. chandiranacn@gmail.com, **DOI: 10.5281/zenodo.13294398**

**ஆய்வுச்சுருக்கம் (Abstract)**

63 நாயன்மார்களில் ஒருவரான நாவுக்கரசர் பற்றிய கதையைப் பெரியபுராணம், தேவாரப் பாடல்களின் பதிக விளக்கம் மற்றும் தேவாரப் பாடல்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. அவ்வாறு அறியப்படும் கதைகளில் தேவாரப் பாடல்களில் உள்ளவற்றிற்கும் மற்ற இரண்டிற்கும் இடையே பெரிய அளவிலான வேறுபாடுகள் இருப்பதை அறிய முடிகின்றது. குறிப்பாக, நாவுக்கரசர் சமணர் தொடர்பும், நாமார்க்கும் குடியல்லோம் என்ற பாடலின் பின்புலக் கதை, நீற்றறையில் அடைக்கப்பட்டார் என்று சொல்வது, கல்லைக் கட்டிக் கடலில் போட்ட கதை, சமண சமயத்தில் இருந்து திரும்பிய நாவுக்கரசர் சிவனிடம் முக்குறியைக் கேட்டுப் பெற்ற கதைப் பின்புலம் போன்றன முற்றிலும் முரண்படுகின்றன. நாவுக்கரசரின் உண்மை வரலாறு, முரண்பாடுகள் மற்றும் அம்முரண்பாடுகளின் பின்னணி அரசியல் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

The story of Navukkarasar, one of the 63 Nayanmars can be understood from Periyapuranam, Pathiga interpretation of Thevaram songs and Thevaram songs. In such stories, there is a great deal of difference between the Thevaram hymns and the other two. Especially, Navukkarasar's Jain connection, the background story of the song Naamarkkum Kudiallom, the story of being locked in a fountain, the story of tying a stone and throwing it into the sea, the story of Navukkarasar returning from Jainism and asking Lord Shiva for the Mukkuri are completely contradictory. This article examines the true history of Navukkarasar, the contradictions and the background of these contradictions.

**திறவுச்சொற்கள் (Keywords):** நாவுக்கரசர், பெரியபுராணம், சமணர், முக்குறி, கதை, திருவதிகை வீரட்டானம்

**ஆய்வுச்சுருக்கம்**

63 நாயன்மார்களில் ஒருவரான நாவுக்கரசர் பற்றிய கதையைப் பெரியபுராணம், தேவாரப் பாடல்களின் பதிக விளக்கம் மற்றும் தேவாரப் பாடல்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. அவ்வாறு அறியப்படும் கதைகளில் தேவாரப் பாடல்களில் உள்ளவற்றிற்கும் மற்ற இரண்டிற்கும் இடையே பெரிய அளவிலான வேறுபாடுகள் இருப்பதை அறிய முடிகின்றது. குறிப்பாக, நாவுக்கரசர் சமணர் தொடர்பும், நாமார்க்கும் குடியல்லோம் என்ற பாடலின் பின்புலக் கதை, நீற்றறையில் அடைக்கப்பட்டார் என்று சொல்வது, கல்லைக் கட்டிக் கடலில் போட்ட கதை, சமண சமயத்தில் இருந்து திரும்பிய நாவுக்கரசர் சிவனிடம் முக்குறியைக் கேட்டுப் பெற்ற கதைப் பின்புலம் போன்றன முற்றிலும் முரண்படுகின்றன. நாவுக்கரசரின் உண்மை வரலாறு, முரண்பாடுகள் மற்றும் அம்முரண்பாடுகளின் பின்னணி அரசியல் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

## முன்னுரை

நாயன்மார்களில் ஒருவரான நாவுக்கரசர் பற்றிய கதை பெரியபுராணம், தேவாரப் பாடல்களின் பதிக விளக்கம் மற்றும் தேவாரப் பாடல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. அவ்வாறு அறியப்படும் கதைகளில் தேவாரப் பாடல்களில் உள்ளவற்றிற்கும் மற்ற இரண்டிற்கும் இடையே பெரிய அளவிலான வேறுபாடுகள் இருப்பதை அறிய முடிகின்றது. குறிப்பாக, நாவுக்கரசர் சமணர் தொடர்பும், நாமார்க்கும் குடியல்லோம் என்ற பாடலின் பின்புலம்,

நீற்றறையில் அடைக்கப்பட்டார் என்று சொல்வது, கல்லைக் கட்டி கடலில் போட்ட கதை, சமண சமயத்தில் இருந்து திரும்பிய நாவுக்கரசர் சிவனிடம் முக்குறியைக் கேட்டுப் பெற்ற கதை பின்புலம் போன்றன முற்றிலும் முரண்டுகின்றன.

பெரியபுராணத்திலும் தேவாரப் பதிக விளக்கத்திலும் சொல்லப்படும் மேற்கண்ட கதைகளில் ஒன்றுகூட தேவாரப் பாடல்களில் பொருத்தம் உடையதாக இல்லை. அதாவது, பெரியபுராணம், மற்றும் தேவாரப் பதிகங்கள் சொல்லும் செய்திகள் நாவுக்கரசர் பாடிய தேவாரப் பாடல்களில் உள்ளவற்றிக்கு முற்றிலும் மாறாக உள்ளன. அம்மாற்றங்கள் குறித்தும் அவற்றின் பின்புல அரசியல் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. அது குறித்த ஒரு விவாதத்தை முன்வைக்கிறது இக்கட்டுரை.

**பெரியபுராணம் சுட்டும் நாவுக்கரசர் சமணர் தொடர்பு வரலாறு**

திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூரில் பிறந்த மருள்நீக்கியாரின் தமக்கையாருக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையார் போரில் வீரமரணம் அடைகிறார். அதனால் மனம்வருந்திய புகழனாரும் மாதினியாரும் இறந்து போகின்றனர். (புகழனார் நோயால் வருத்தமுற்று இறந்தார். அவர் இறந்தபின் வாழ விரும்பாத மனைவி மாதினியாரும் உயிர்விட்டார்.) மணக்க இருந்த கலிப்பகையாரையும் இழந்து தந்தையையும் தாயையும் இழந்த சோகத்தால் திலகவதியார் தாமும் உயிர்துறக்க எண்ணினார். ஆனால், தம்பியிருக்கின்றாரே! அவருக்காக வாழ்ந்தாக வேண்டுமே என எண்ணி அம்முயற்சியைக் கைவிட்டார்.

மருள்நீக்கியார் உலக நிலையாமையை உணர்ந்தார். எனவே, உலகப்பற்றைத் துறந்து அறச்செயல்கள் பல செய்யத் தொடங்கினார். பின் சிவபெருமான் நல்ல சமயம் இது என அருளாததால் பாடலிபுத்திரம் சென்றார். அங்குச் சமணப் பள்ளியிருந்தது. அந்தச் சமண சமயமே வீட்டுநெறி அளிப்பது என அதில் புகுந்தார். அச்சமய உண்மைகளைக் கற்று வல்லவராய் விளங்கியதால் அவரைத் தம் சமயத் தலைவராகச் சமணர் ஏற்றுக் கொண்டனர். அவருக்குத் 'தருமசேனர்' என்ற மேலான பட்டப் பெயரையும் சூட்டினர்.

திலகவதியார் தம் தம்பியரின் போக்கை நினைத்து வருந்தி திருவதிகை இறைவரிடம் தம்பியைச் சமண சமயத்திலிருந்து மீட்டுத்தரும்படி அருள் செய்யுமாறு வேண்டிக்கொண்டார். திருவதிகையார் கனவில் தோன்றிய சிவபெருமான் மருள்நீக்கியாரைச் சூலை நோய் தந்து ஆட்கொள்வதாய்க் கூறினார்.

சிவபெருமான் அருள் செய்தபடியே தருமசேனருக்குச் சூலை நோயைத் தந்தார். பெரிதும் வருத்தும் அந்நோயைச் சமணர்களால் போக்க இயலவில்லை. ஆதலால், நோயுற்று வருந்தும்நிலை தம் தமக்கையாருக்குச் சொல்லி வரும்படி ஆட்களைத் தூதனுப்பினார் தருமசேனர். தமக்கையார் தம் தம்பியைத் தமது இருப்பிடத்துக்கு வரும்படி சொல்லியனுப்பினார்.

தருமசேனர் திலகவதியாரைக் கண்டு அடிகளில் விழுந்து வணங்கினார். அவர் திருநீற்றைத் தந்து திருவதிகை வீரட்டானக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே நாவுக்கரசர் பாடல் பாடும் அருள்பெற்றுத் தம் நோய் நீங்கிடக் 'கூற்றாயினவாறு விலக்ககலீர்' என்னும் தொடக்கம் கொண்ட பதிகத்தைப் பாடினார். கொடிய சூலைநோய் அவரை விட்டு நீங்கியது. இறைவர், *நீ அரிய பதிகம் பாடினாய், ஆதலால் உனக்கு நாவுக்கரசு என்ற பெயர் வழங்குவதாகுக!" என்று அருள் செய்தார்.


DOI: 10.5281/zenodo.13294268

இறைவனின் கருணை திருநாவுக்கரசருக்கு வியப்பைத் தந்தது. மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றாலும் தூயராய்த் தொண்டு செய்யத் தொடங்கினார். உழவாரப்படை கொண்டு கோயிலில் பணியைச் செய்யலானார். நாவுக்கரசரின் போக்கை அறிந்த சமணர் பொறாமை கொண்டு பல்லவ மன்னனிடம் போய் அவர்க்குத் தக்க தண்டனையைத் தர வேண்டும் என்று உரைத்தனர். அதனால், அம்மன்னன் நாவுக்கரசரை அழைத்து வரும்படி தன் அமைச்சரை அனுப்பினான். அவர்கள் கூற்றைக் கேட்ட நாவுக்கரசர் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற மறுமாற்றத் திருத்தாண்டகத்தைப் பாடி, மறுத்தார். பின் சிவபெருமான் அருள் தமக்கு இருப்பதால் அஞ்ச வேண்டியதில்லை எனத் தெளிந்து அமைச்சருடன் பல்லவ மன்னனிடம் சென்றார். மன்னன் அவரை நீற்றறையில் இடும்படி சொன்னான். அவர்கள் நாவுக்கரசரை வெப்பமுடைய நீற்றறையில் இட்டுக் கதவைப் பூட்டினர். உள்ளே இடப்பட்ட அவர் இறைவனை நினைத்து 'மாசில் வீணையும்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அந்த நீற்றறை இறைவனின் திருவடி நிழலாக எண்ணிய அவர்க்கு வீணையின் இசையும் சந்திரனும் தென்றலும் இளவேனிலும் போல் குளிர்ந்து விளங்கியது.

ஏழுநாட்கள் சென்றபின் அந்த நீற்றறையைச் சமணர் திறந்து பார்க்க, அவர் ஊறு இன்றி இருந்ததைக் கண்டனர். அவர் தம்மிடத்தில் கற்ற மந்திரத்தால் துன்பமின்றித் தப்பித்தார் என்று கூறி, மேலும் வேறு தண்டனையை அளிக்க வேண்டும் என்றனர். அவர்க்கு நஞ்சு ஊட்டுவது என்று முடிவு செய்தனர். நஞ்சுண்ட அவரை யானையின் காலில் இட்டுக் கொல்ல வேண்டும் என முடிவு செய்தனர். யானை அவர் எதிரே வந்தபோது 'சுண்ணவெண்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். யானை அவரை வணங்கிவிட்டுச் சென்று தம்மை ஏவியவரைக் கொன்றது.

அதுகண்ட சமணர் மேலும் அச்சம்கொண்டு அரசனிடம் அவரைக் கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்ச வேண்டும் என்றனர். கருங்கல்லில் கட்டப்பட்டுக் கருங்கடலில் அவர் விடப்பட்டார். அப்போது அப்பெருமான் 'சொற்றுணை' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். 'நமச்சிவாய' மந்திரம் அவரைக் கரையேற்றிவிட குப்பம் என்ற இடத்தில் அவர் கரையேறினார். திருப்பாதிரிப் புலியூருக்குச் சென்று இறைவர் திருமுன்பு 'ஈன்றாளுமாய் எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார்.

நாவுக்கரசரின் ஆற்றலையும் அதற்குக் காரணமான சைவ மேம்பாட்டையும் மன்னன் உணர்ந்தான். சைவன் ஆனான். கேடு செய்த சமணர் அடங்கினர். மன்னன் நாவுக்கரசரிடம் வந்து வணங்கித் தன் குற்றங்களைப் பொறுக்க வேண்டும் என்றான். சமணரின் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துவிட்டு அவற்றின் கற்களைக் கொண்டு சென்று திருவதிகைப் பதியில் சிவபெருமானுக்குக் 'குணதர வீச்சரம்' என்ற கோயிலை எடுப்பித்தான்.

நாவுக்கரசர் அதன்பின் திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய பதிகளுக்குச் சென்று இறைவனை வணங்கினார். அவர் திருத்தூங்கானை மாடம் என்ற பதியுள் சென்று இறைவனை வணங்கி "சமண சமயத்துடன் தொடர்புடைய உடலுடன் நான் வாழப் பொறேன். நான் உயிர்வாழ உம் முத்திரையான சூலத்தையும் காளை ஆகிய சின்னத்தை என் தோளில் பொருத்திடல் வேண்டும்!" என்று வேண்டினார். ஒரு சிவபூதம் ஒருவரும் அறியாமல் வந்து அவருடைய தோளில் சூலம், காளை ஆகிய சின்னங்களைப் பொறித்துச் சென்றது (பெரியபுரா.1266-1419).

இவ்வாறு பெரியபுராணத்தில் நாவுக்கரசர் சமணர் தொடர்பு பற்றிய செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றில் உள்ள செய்திகளைத் தேவாரப் பாடல்களில் இடம்பெற்றுள்ள பதிக விளக்கங்களிலும் காணமுடிகின்றது. ஆனால், நாவுக்கரசர் தேவாரப் பாடல்களில் இவற்றில் ஒரு செய்திகூடச் சொல்லப்படவில்லை.

மேற்சொல்லப்பட்ட செய்திகளில் இடம்பெற்றுள்ள நாவுக்கரசர் சமணர் தொடர்பு பற்றி தேவாரப் பாடல்களில் உள்ள செய்திகளையும் இனி ஒப்பிட்டுக் காண்போம்.

முதலாவதாக திருவதிகை வீரட்டானம் தலத்தில் சூலை நோய் நீங்கியது என்பதைப் பற்றிக் கூறும் இடத்தில் உள்ள முரண்பாடு குறித்துக் காண்போம்.

**திருவதிகை நோய் தீர்த்தல்**

திருநாவுக்கரசர் தேவாரம் நான்காம் திருமுறையின் முதல் இரு பதிகங்கள் திருவதிகை வீரட்டானம் தலத்தில் பாடப்பட்டவையாக உள்ளன. பதிக விளக்கம் திருநாவுக்கரசர் சூலை நோய் நீங்கப்பெற்ற தலம் என்ற குறிப்போடு உள்ளது. அந்தத் திருத்தலம் குறித்துப் பாடப்பட்டுள்ள முதல் இரு பதிகங்களில் ஓர் இடத்தில்கூட தன்னுடைய சமண சமயச் சார்பு குறித்தும் அங்குத் தனக்கு ஏற்பட்ட நோய் நீக்க இயலாத நிலை குறித்தோ அங்கிருந்து நோய் நீக்க இத்தலத்திற்கு வந்தது குறித்தோ எவ்விதக் குறிப்பும் பாடலில் சொல்லப்படவில்லை.

மாறாக, ஒவ்வொரு பாடலிலும் தன்னுடைய வயிற்றுநோய் நீங்க வேண்டும் என திருநாவுக்கரசர் தன்னுடைய நிலை குறித்த செய்திகளை வெளிப்படுத்தி உள்ளார். அவை,

- தேவரீரை அன்றி வேறு ஒருவரையும் நினையாத என் மீது வந்து பற்றிக்கொண்டு நஞ்சு போன்ற அச்சத்தைத் தரும் வயிற்றுப் பிணியை அகலுமாறு செய்வீர். (பா.2)
- நீரின் ஆழத்தில் சிக்கித் தடுமாறி, பின் மீண்டும் எழும் வழித்துறை அறியாது தவிப்பது போன்று நெய்கின்றேன். நீரில் விழுவதற்கு முன்னர் அறிவுறுத்திய மொழியைக் கேளாது இகழ்ந்தமையால் இவ்வாறு அழுகின்றேன். (பா.5)
- பூசை வழிபாட்டினை யான் மறந்ததில்லை. நற்றமிழால் இசைபாடிப் போற்றும் மாண்பினை மறந்ததில்லை. நன்மையை அடைந்த காலத்திலும் தீமை உற்ற காலத்திலும் தேவரீரை மறந்ததில்லை. தேவரின் திருநாமத்தை மறந்ததில்லை. (பா.6)
- எனக்கு வழி நின்று உணர்த்துபவர் இல்லாத காரணத்தால் மனைவாழ்க்கையும் போகம் தரும் செல்வங்களுமே உயர்வு உடையது எனப் பொய்யாகக் கருதி இருந்தேன். இப்போது அவை உயர்ந்தது அல்ல எனக் கருதி உனக்கு ஆட்செய்து வாழலாம் என்று நினைக்கும்போது என் வயிற்றில் உள்ள சூலை நோயானது என்னை வாட்டிட நான் அயர்ந்தேன். (பா.7)
- மனைவாழ்க்கையால் வாழும் நெறியினை உலகத்தவரின் பெரும்பேறாக வலிந்து கருதினேன். இப்போது அது பேறு ஆகாது என அறிந்தேன். (பா.8)
- அடியவர்கள் துன்புறுவது என ஆயின் அவர்கள் உம்மை நன்கு உணர மாட்டார்கள் எனவே சூலையைத் தீர்த்தருள் வீராக (பா.9)

என மேற்கண்டவாறு ஆறு பாடல்களில் உள்ள அவரது சிந்தனையின் வெளிப்பாடுகள் சிந்திக்கத்தக்கன. குறிப்பாக, பாடல் 7,8 இல் மனைவாழ்க்கை மற்றும் போகம் தருவன உயர்வானது என உள்ளது. ஆனால், பெரியபுராணமும் தேவாரப் பதிக விளக்கங்களும் அவர் சமணத் துறவியாக இருந்தார் என்று கூறியுள்ளன.

மேலும், அடுத்த (திருவதிகையில் பாடப்பட்ட இரண்டாவது) பதிகத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களில் சிவபெருமானின் சிறப்புகளில் நல்லவை, சிவபெருமானின் உருவ அமைப்பு / சிவபெருமானுடைய புராணச் செய்தி கூறி, அத்தகையவருக்கு நான் அடியவர். எனவே, நான் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை என்பதாகவே அனைத்துப் பாடல்களும் அமைந்துள்ளன.

சான்றாக, 'ஈசன், பன்றியின் கொம்பினை அணிந்தவர்; அழகிய ஆமையோட்டினைப் பொருந்தித் தவழுமாறு வைத்தவர்; நீண்டு, உறுதியுடன் மேவும் தோளில் குளிர்ந்து மேவும் நிலவின் ஒளிக்கதிர் போன்று முப்புரிநூல் விளங்கப் பெற்றவர்; கொக்கிற்கு குடியவர், மழுப்படையுடையவர், இடபக் கொடியுடையவர். அப்பெருமான் கெடில நதியைத் தீர்த்தமாகக் கொண்டு வீரட்டானத்தில் திகழ்பவர். அவருடைய அடியவர் யாம். எனவே, யாம் அஞ்சுவதற்குண்டான பொருள் எதுவும் இல்லை. எம்மை அஞ்சச் செய்யுமாறு வரக்கூடியதும் எதுவும் இல்லை. (பா.12)

மேலும், 'சுண்ணவெண் சந்தன' எனத் தொடங்கும் இரண்டாவது பதிகத்தில் பெரியபுராணத்தில் (1380) கூறியுள்ளவாறு பல்லவன் பட்டத்துயானை தன்னைத் தாக்கவரும் குறிப்பு எதையும் நாவுக்கரசர் குறிப்பிடவில்லை என்பதும் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்று.

இவ்வாறு திருவதிகை வீரட்டானம் என்னும் திருத்தலத்தில் திருநாவுக்கரசர் பாடியதாக உள்ள முதல் இரு பதிகங்களில் இடம்பெற்றுள்ள 20 பாடல்களில் ஒன்றில்கூட அவர் சமண சமயத்தில் இருந்தது குறித்தோ அல்லது அந்தச் சமயத்தில் இருந்ததற்கான வேறு எவ்வகையான குறிப்போ இல்லை என்பது தெளிவாகிறது.

அதற்குமாறாக, மனைவாழ்க்கையும் பொருள்மீதான போகமும் அவர் விரும்பியதாக பதிகம் ஒன்றிலுள்ள பாடல்களில் கூறியுள்ளதை நாம் கவனிக்க வேண்டி உள்ளது. அப்படிப் பார்க்கிற பொழுது அது சமண சமயக் கருத்திற்கு நேர் எதிராக உள்ளது என்பது சொல்லத் தேவையில்லை. அதாவது, அவர் சமண சமயத்தைச் சார்ந்திருந்தால் துறவியாகத்தானே இருந்திருப்பார். அப்படித்தான் பெரியபுரணம் கூறுகின்றது. அத்துடன் தன்னுடைய நோயைச் சமண சமயத்தவர்களால் நீக்க இயலவில்லை என்று பெரியபுராணத்தில் உள்ள குறிப்பையாவது பாடல்களில் சொல்லியிருக்க வேண்டும் அல்லவா? அதுவும் இல்லையே? அப்படி இருக்க அவர் சமண சமயத்தில் துறவியாக இருந்தார் என்றும் சமணர்களால் தீர்க்க முடியாத நோய் சிவனருளால் நீங்கியது. எனவே, சிவனே முழுமுதல் கடவுள் என்று அவர் மீண்டும் சைவ சமயம் சேர்ந்தார் எனச் சொல்லப்படும் கதையானது புனையப்பட்ட கதை என்ற அளவிலேயே நாம் கொள்ள வேண்டி உள்ளது.

இவையன்றி, திருநாவுக்கரசர் திருவதிகை வீரட்டானம் குறித்துப் பாடியுள்ள மேலும் உள்ள பதினான்கு பதிகங்களில் ஓர் இடத்தில்கூட சமணர் குறித்து எவ்விதக் குறிப்பும் இல்லை. அதாவது, நான்காம் திருமுறை தேவாரத்தில் உள்ள 10, 24, 25, 26, 27, 28, 104 ஆகிய பதிகங்கள் மற்றும் ஐந்தாம் திருமுறை தேவாரத்தில் உள்ள 53 மற்றும் 54 வது பதிகங்கள் ஆறாம் திருமுறையில் உள்ள 3, 4, 5, 6, 7 ஆகிய பதிகங்கள் திருவதிகை வீரட்டானம் குறித்து அவர் பாடிய பதிகங்களாக உள்ளன. அவற்றிலும் இக்குறிப்பு இல்லை.

பதிகம் 26 இல் 'ஈசனே! இத்தேகமானது பொய்த்தன்மை உடையது. நிலையில்லாதது. அழுகிப் பாழ் கொள்ளக்கூடியது. இத்தகைய தேகத்தைக் கொண்டு மெய்யன் என்னும் பெயருடையவனாய் நான் வாழ மாட்டேன். நான் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று கருதினாலும் ஐம்புலன்கள் இணங்காது. எனவே, இதிலிருந்து மீள வேண்டும் என்னும் கருத்தில் தேவரீருடைய சேவடிகள் இரண்டையும் காணுமாறு அலைந்து வருந்தினேன். ஐயனே! நீவிர் அதிகை வீரட்டத்தில் உள்ளவரே! (பா.260) என உள்ளது.

இப்பதிகத்தில் உள்ள பிற பாடல்களும் 'தேவரீருடைய சேவடிகள் இரண்டையும் காணுமாறு அலைந்து வருந்தினேன். ஐயனே! நீவிர் அதிகை வீரட்டத்தில் உள்ளவரே!' என அமைந்துள்ளது.

'எமனுக்கு அஞ்சி... கறைப் பெருங்கண்டத் தானே காய்கதிர் நமனை அஞ்சி நிறைப்பெருங் கடலும் கண்டேன் நீள்வரை உச்சி கண்டேன் பிறைப்பெரும் சென்னியானே பிஞ்ஞகா இவையனைத்தும் அறுப்பதோர் உபாயம் காணேன் அதிகை வீரட்டானீரே' (273) என்று பதிகம் 27 இல் ஒரு பாடலும் உள்ளது.
இவற்றைத் தவிர இப்பதிகத்தில் இடம்பெற்றுள்ள மற்ற பாடல்கள் அனைத்தும் சிவபெருமானுடைய சிறப்புகள் அல்லது சிவபெருமான் தொடர்பான புராணச் செய்திகள் திருவதிகை வீரட்டானம், கெடில நதி போன்ற செய்திகளைத் தவிர்த்து நாவுக்கரசர் சமணர் தொடர்பான வேறு எந்தச் செய்தியும் இடம்பெறவில்லை.

சான்றாக, 24ஆவது பதிகத்தில் உள்ள 'ஈசன், கருத்த இரும்பு போன்ற பலம்பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர்; கருப்பஞ்சாறு போன்ற இனிய தன்மையில் மொழிபுகலும் உமாதேவியைப் பாகமாக உடையவர்; வண்டு உதிர்க்கும் தேன்மலர் போன்ற இனிய கங்கையைச் சடையில் ஏற்றவர். அப்பெருமான், சென்னியில் மலர்கள் சூடி விளங்கும் அதிகை வீரட்டனாரே (பா.239) என்ற பாடலைக் கூறலாம்.

ஆறாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள ஆறாம் பதிகத்தில் 'மேவும் திருவீரட்டானத்தில் வீற்றிருக்கின்ற எமது செல்வமாகிய சிவபெருமானுடைய திருவடியானது, அரவணையில் பள்ளி கொள்ளும் திருமாலால் சிந்தித்துப் போற்றப்படுவது; நான்கு மறைகளை ஓதும் நான்முகன் தனது தலையில் சூடும் பாங்கு உடையது. முருகப்பெருமானால் கைதொழுது ஏத்தப்படுவது; சாரும் பக்தர்களுக்கு எல்லாம் அடைக்கலம் தருவது; பரவி ஏத்தும் அன்பர்களின் பாவத்தைத் தீர்த்தருளுவது. பதினெட்டு கணங்களும் போற்றிப்பாடிப் புகழப்படுவது. இத்தகைய பெருமையுடைய திருவடியை வணங்கி மகிழ்க என்பது குறிப்பு (54)' என உள்ளது.

மேற்கண்ட பதிகத்தில் உள்ள பத்துப் பாடல்களும் 'இறைவனின் திருவடியை வணங்கி மகிழ்க' என்றே சொல்லப்படுவது கவனிக்கத்தக்கது.

இப்படி திருவதிகை வீரட்டானம் எனும் திருத்தலத்தில் பாடப்பட்டுள்ள 16 பதிகங்களில் இடம்பெற்றுள்ள திருநாவுக்கரசர் தேவாரப் பாடல்களில் மட்டுமன்றித் திருஞானசம்பந்தர் மற்றும் சுந்தரர் பாடியுள்ள தேவாரப் பாடல்களிலும்கூட திருநாவுக்கரசர் சமண சமயத்தைத் தழுவி இருந்தார் என்றோ, அங்கு அவருக்குச் சூலைநோய் ஏற்பட்டது என்றோ, அந்தச் சூலைநோய் சமணர்களால் தீர்க்க முடியாமல்போக திருவதிகை வந்து திலகவதி மூலமாக திருவதிகை வீரட்டானத்தில் உள்ள இறைவனை வேண்டி, தன் நோயை நீக்கிக் கொண்டதோடு சைவசமயத்தைத் தழுவ ஆரம்பித்தார் என்றோ கூறப்படும் கதைக்கு ஏற்ற எவ்விதக் குறிப்பும் இல்லை.

'திருஞானசம்பந்தருக்கு ஈசன் திருநடனக் காட்சியை நல்கிய திருத்தலம். அதிகை - தலப் பெயர். வீரட்டானம் கோயில் பெயர்' இது திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ள 46 ஆவது பதிகமான திருவதிகை வீரட்டானம் என்ற பதிகத்திற்கு விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. பதிகத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு பாடலும் திருநடனம் கண்டு மகிழ்ந்த பின்புலத்தில் அமைந்துள்ளது. சான்றாக, ஒரு பாடலைப் பார்க்கலாம்.

'பருத்துக் குட்டையான பூத கணங்கள் குழுமி இருக்க, கெண்டை மீன்கள் உடைய கெடில நதியின் வடக்குப் பக்கத்தில் வண்டுகள் மருள் என்னும் பண்ணில் பாட்டு இசைக்க, பொன்போன்ற வண்ணம் உடைய விரிந்த கொன்றைமாலைகள் சூடித் திருக்கரத்தில் அனலை ஏந்தி, ஈசன் வீரட்டானத்தில் நடம் புரிகின்றார் (திருஞானசம்பந்தர் தேவாரம்.1:493) இவ்வாறு திருஞானசம்பந்தரின் திருவதிகை வீரட்டானம் என்ற திருத்தலத்தில் பாடப்பட்டதாக இடம்பெற்றுள்ள பதிகம் 46 இல் உள்ள பாடல்கள் அனைத்திலும் சிவபெருமானின் பல்வேறு சிறப்புகள், சிவன் குறித்த புராணச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. மேலும், இப்பதிகத்தில் இடம்பெற்றுள்ள 11 பாடல்களிலும் பதிக விளக்கத்திற்கு ஏற்ப சிவனின் நடனம் குறித்த பதிவு தவறாமல் இடம்பெற்றுள்ளது'. சிதம்பரத்தை நோக்கிச் சென்ற நம்பியாரூரர் இடையே பல தலங்களைத் தரிசித்து திருவதிகைக்கு அருகே வருகையில் அப்பர் சுவாமிகள் தொண்டுபுரிந்த பதியென்று அதனை மிதிக்க அஞ்சி அதற்குள் புகாமல், அதன் புறத்தே இருந்த சித்த வடமடம் புகுந்து இளைப்பாறித் துயின்றார். அப்போது திருவதிகை வீரட்டானமுடைய பெருமான் முதிய அந்தணர் வேடங்கொண்டு அந்த மடத்தில் புகுந்து சுந்தரர் தலைமீது கால்படும்படி படுத்துக் கொண்டிருந்தார். ஆளுடைய நம்பிகள், "என் தலைமேல் கால் வைத்துள்ளீரே" என்று கேட்க, "மூப்பு மிகுதியால் ஒன்றும் தெரியவில்லை" என்றார். நம்பிகள் வேறு திசையில் தலை வைத்துத் துயில, அங்கும் திருமுடிமேல் அவர் திருத்தாள் நீட்ட, "பல தடவையும் என் தலைமேல் வைத்த நீர் யார்?" என்று கேட்க, சிவபெருமான், "அறிந்திலையோ?" எனச் சொல்லி மறைந்தருளினார். சுந்தரர், "சிவபெருமான் திருவருளை அறியாமல் என் செய்தேன்!" என இரங்கி இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய - தடுத்தாட்கொண்ட. 82-88). இவ்வாறு சுந்தரர் ஏழாம் திருமுறை தேவாரப் பதிகம் 38 - திருவதிகை வீரட்டானத்தில் வீற்றுள்ள ஈசன் குறித்து பாடப்பட்டுள்ளது. இப்பதிகத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களில் சிவபெருமானின் பல்வேறு சிறப்புகளும் புராணக் குறிப்புகளும் சொல்லப்பட்டுள்ளதுடன் சுந்தரர் தலைமீது கால் வைத்த என்பதும் சொல்லப்பட்டுள்ளது. அது இப்பதிகத்தில் இடம்பெற்றுள்ள பத்துப் பாடல்களில் (390 391 நீங்களான) 8 பாடல்களில் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

இப்படி, திருஞானசம்பந்தர் மற்றும் சுந்தரர் திருவதிகை வீரட்டானத்தில் உள்ள சிவபெருமானைத் தரிசித்த பின்புலத்தில் பதிகம் குறித்த செய்தியும் பாடலில் இடம்பெற்றுள்ள செய்தியும் ஒன்று போல் இருப்பதை நாம் அறிய முடிகிறது.

ஒரு சிறுகுறிப்பு விளக்கம் - திருஞானசம்பந்தர் தேவாரம் திருநாகேச்சுரம் பதிகம் 255 இல் "சமணரும் சாக்கியரும் புனைந்து உரைக்கும் சொற்களை ஏற்காது மயானத்தில் நல்லூரில் நடனம் புரியும் நாதனாகிய நாகேஸ்வரனைத் தேன் துளிர்க்கும் புதுமலர் கொண்டு தூவி போற்றி திருவடியைப் பணிந்து வணங்குவது நல்வழியின் தன்மையாகும்" (திருஞானந்தர் தேவாரம் 1298) என்றும் அதற்கடுத்த 256 பதிகமான முக்திச்சரம் என்ற தலத்தில் பாடப்பட்ட பதிகத்தில் "துவர் ஆடை அணிந்துள்ள சாக்கியரும் திகம்பரராகிய சமணரும் குறைக்கும் மொழிகள் ஊனம் உடமையாகும் என ஆக்கிய ஈசன் மாற்றாரை வென்று தென்னவனாய் உலகாண்ட கோ செங்கல் சோழன் திருவுள்ளத்தில் பாங்கால் அமையப்பெற்ற முக்கிய சுரத்தில் மேவும் அடிகள் ஆவர்" (திருஞானசம்பந்தர் தேவாரம்

1309) என்றும் குறிப்பிடும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் கல்லில் கட்டப்பட்டுக் கடலில் வீசி எறிந்தபொழுது கரை ஏறிய திருத்தலமாக விளங்கக்கூடிய திருப்பாதிரிப்புலியூர் என்ற தலத்தைக் குறித்து 257 வது பதிகம் பாடியுள்ளார். அப்பதிகத்தில் "சமணரும் தேரரும் சொல்லும் கருத்துக்கள் மன எரிச்சலால் ஆகியன. அவ்வுரைகளை ஏற்காது திருவருளைப் புரிந்த திருவெண்ணீற்றினைத் தரித்த சிவபெருமான் எழுந்தருளி விளங்கும் பாதிரிப்புலியூரை ஏத்தி வழிபடுவீராக" (திருஞானசம்பந்தர் தேவாரம் 1320) என்றும் ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

திருஞானசம்பந்தர் ஒவ்வொரு பாடலிலும் திருமாலும் பிரம்மனும் திருவடியைக் காண இயலாத சிவன் என்று வழக்கமாகக் குறித்துச் செல்லுவது போல சமணர் பற்றிய இந்தக் குறிப்பு இடம்பெற்றுள்ளது என்பதாக மட்டுமே இதை நாம் கொள்ள முடிகிறது. மேலும், திருநாவுக்கரசர் கல்லோடு கட்டப்பட்டது. கடலில் வீசி எறியப்பட்டதும் அவர் திருவைந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்து, கல்லில் மிதந்து வந்து இத்திருத்தலத்தில் கரை ஒதுங்கியதும் குறித்து திருஞானசம்பந்தர் திருப்பாதிரிபுலியூரில் பாடப்பட்ட பாடலில்கூட குறிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

திருவதிகை வீரட்டானம் என்ற திருத்தலத்தில் நோய் நீங்கப் பெற்றார் என்பது பாடலில் திருவதிகை வீரட்டானம் நான்காம் திருமுறை - தேவாரம் பதிகம் ஒன்று, இரண்டு தெளிவாக உணர்த்துகிறது. ஆனால், சமண சமயத்தில் இருந்து அவர் வந்தார் என்ற கருத்திற்கு திருவதிகை வீரட்டானம் என்ற திருத்தலத்தில் நாவுக்கரசர் பாடி உள்ள 16 பதிகங்கள் மற்றும் திருஞானசம்பந்தர் மற்றும் சுந்தரர் பாடியுள்ள தலா ஒரு பதிகம் என மொத்தம் பாடப்பட்டுள்ள பதினெட்டுப் பதிகங்களில் உள்ள பாடல்களில் நாவுக்கரசர் -சமணர் தொடர்பு குறித்த ஒரு சிறுகுறிப்பும் இல்லை.

**கல்லைக் கட்டி கடலில் போட்ட கதை**

திருநாவுக்கரசர் நான்காம் திருமுறை தேவாரம் 11வது பதிகம் 'பொது - நமச்சிவாய திருப்பதிகம்' என உள்ளது. இப்பதிகத்தின் விளக்கமானது 'திருநாவுக்கரசர், சமண சமயத்திலிருந்த காலத்தில், அவரைச் சூலைநோயால் பீடிக்கச் செய்து ஆட்கொண்டார் சிவன். திருவதிகையில் வீரட்டானத்தில் "கூற்றாயின வாறு விலக்ககிலீர்" என எடுத்தோதிப் பாடிய நாவுக்கரசுக்குச் சூலை கடிதில் நீங்கிற்று. இதனைப் பொறுக்காத மாற்றுச் சமயத்தினர் மன்னனின் துணைகொண்டு பற்பல இன்னல்களைச் செய்தனர். கல்லில் பிணித்துக் கடலில் எறிந்தனர்; அப்போது ஆளுடைய அரசர், திருவைந்தெழுத்தினை ஓதிக் கல்லையே தெப்பமாகக் கொண்டு கரை ஏறினார். அதுவே இத்திருப்பதிகம். சிவன் பாலைக் காட்டித் திருஞானசம்பந்தரையும், சூலை காட்டித் திருநாவுக்கரசரையும். ஓலை காட்டிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் ஆட்கொண்டார் என்பது ஆன்றோர் வாக்கு (பன்னிரு திருமுறைகள் - ஏழாம் தொகுதி - திருநாவுக்கரசர் தேவாரம் நான்கு, ப.135) எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், கல்லில் கட்டிக் கடலில் போட்டபோது, 'சொற்றுணை வேதியன்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார் என்றும், நமச்சிவாய மந்திரம் மூலம்தான் அவர் கரை அடைந்தார் என்றும் பெரியபுராணமும் (1387 - 92) கூறுகின்றது.

திருநாவுக்கரசர் நான்காம் திருமுறை தேவாரத்தில் இடம்பெற்றுள்ள பதினோராவது பதிகமான நமச்சிவாய திருப்பதிகத்தின் முதல் பாடலான

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்

பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே” (104)

என்பதில் கல்லைக் கட்டி கடலில் போட்டாலும் நமச்சிவாய என்ற திருமந்திரம் காக்கும் என்றுதான் கூறப்பட்டுள்ளதே ஒழிய, பதிக விளக்கத்திலும், பெரியபுராணத்திலும் சுட்டி உள்ளவாறு கல்லைக் கட்டி கடலில் போட்ட போதுதான் நமச்சிவாய என்ற ஐந்து எழுத்து மந்திரத்தை ஓதி அதிலிருந்து விடுபட்டு கரை ஏறினேன் என்று பொருள் கொள்ளும்படியாக இல்லை என்பது தெளிவு.

மேலும், பண்ணிய பாவத்தை அறுக்கும், நாவினுக்கு அருங்கலனாக விளங்கும், நடுக்கத்தைக் கெடுக்கும், நமக்கு அருங்கலம், நலம் கொடுக்கும், நன்னெறியாக விளங்கும், இடுக்கண் கலையும் என நமச்சிவாய மந்திரத்தின் சிறப்புகள் பற்றியே இப்பதிகத்தில் உள்ள மற்ற பாடல்களும் அமைந்துள்ளன. பதிகத்தில் சுட்டப்பட்டுள்ளவாறோ அல்லது ஆன்றோர் வாக்கு என்று சொல்லப்படும் கதைக்கு ஏற்றவாறோ அல்லது பெரியபுராணத்தில் சொல்லப்பட்டுள்ளவாறோ நாவுக்கரசரின் நமச்சிவாய பதிகத்தில் உள்ள பாடல்கள் அமைந்திருக்கவில்லை என்பது தெளிவு.

**நீற்றறையில் அடைக்கப்பட்டது**

திருநாவுக்கரசர் நான்காம் திருமுறை தேவாரம் 90ஆவது பதிகம் ‘பொது - தனித்திரு குறுந்தொகை’ என்ற பெயரில் அமைந்துள்ளது. இந்தப் பதிகத்திற்கான விளக்கம் "சைவசமயத்தைச் சார்ந்து திருவதிகை நாதனைக் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என எடுத்தோதிச் சூலைநோய் தீரப்பெற்றுத் 'திருநாவுக்கரசு' என்னும் திருநாமத்தை, இறைவன் அருளிச்செய்த பின்னர், சமணர்தம் ஏவலால் நாயனார், நீற்றறையில் இடப்பட்டார். சிவ மந்திரத்தை நெஞ்சுள் இருத்தி ஓதியவாறு விளங்கிய நாயனாருக்கு அவ்வெம்மையுடைய நீற்றறை குளிர்ச்சியாக விளங்கியது. (பன்னிரு திருமுறை தேவாரம் ஐந்து பக். 539,40) என்று கூறுவதுடன், பின்வரும் பெரியபுராணப் பாடலை அதற்குச் சான்று காட்டுகின்றது.

"வெய்யநீற்று அறையது தான்வீங்கிளவே னிற்பருவம்
தைவருதண் தென்றல் அணை தண்கழுநீர்த் தடம் போன்று
மொய்யொளி வெண் நிலவு அலர்ந்து முரன்ற யாழ் ஒலியினதாய்
ஐயர் திரு வடி நீழல் அருளாகிக் குளிர்ந்ததே" (பெரிய புராணம். 1363)

ஆனால், நாவுக்கரசரின் அப்பதிகத்தில் உள்ள ‘மாசில் வீணையும்...’ என்ற முதல் பாடல், "சிவபெருமானுடைய இணை மலர்களாகிய திருவடியின் ஒளியானது, குற்றமில்லாத வீணையின் நாதமாகச் செவிக்கு இனிமை தருவதும், மாலைநேரத்தில் விளங்கும் முழு நிலவினைப் போன்று கண்ணுக்கு இனிமை அளிப்பதும், வீசுகின்ற தென்றல் காற்று போன்று நாசிக்குப் புத்துணர்வை நல்குவதும்; இளவேனில் போன்று மெய்யினுக்கு இளகிய வெப்ப உணர்வைத் தருவதும், வண்டுகள் ஒலிக்கும் நறுமணம் கமழும் பொய்கையில் விளங்கும் நீரின் குளிர்ந்த தன்மை போன்று வாய்க்குச் சுவை தருவதும், ஆகியவாறு விளங்கிற்று" (ஐந்தாம் திருமுறை – தேவாரம் - பா.884) என உள்ளது.

இப்பாடலில் மட்டுமின்றி இதற்கு அடுத்த மற்ற பாடல்களிலும் சிவபெருமானை வணங்கும் அடியவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் குறித்துப் பொதுவாக மட்டுமே சொல்லப்பட்டுள்ளன. இப்பதிகத்தில் உள்ள எந்தப் பாடலிலும் தான் நீற்றறையில் இடப்பட்டது குறித்தோ அங்கு நமச்சிவாய மந்திரத்தை உச்சரித்தது குறித்தோ சிவனை குறித்து ஆராதித்தது குறித்தோ அவ்வாறு செய்த காரணத்தினால் அங்கிருந்து விடுபட்டு இன்பம் அடைந்தது என்பது போன்ற பொருள்கொள்ளும் தன்மையில் பாடலில் செய்திகள் இடம்பெறவில்லை.

**நாமார்க்கும் குடியல்லோம்**

திருநாவுக்கரசர் ஆறாம் திருமுறை - தேவாரம் பதிகம் 98 'பொது - மறுமாற்றத் திருத்தாண்டகம்' என அமைந்துள்ளது. அப்பதிகத்தின் விளக்கமானது, "... சைவ சமயத்தைச் சார்ந்து மேவிச் சிவனடியாராகிய திருநாவுக்கரசருக்குத் துன்பத்தைக் கொடுக்கவும் தண்டிக்கவும் சமணர்கள் அரசனிடம் முறையிட, அவன் அச்சார்பு உடையவனாகி அமைச்சரை அனுப்பி நாயனாரை அழைத்து வருமாறு ஆணை பிறப்பித்தான் எனப் பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளவாறே உள்ளது.

அதன்படி அமைச்சர் முதலியோர் நாயனாரிடம் சென்று அரசனின் ஆணையைத் தெரிவித்தனர். அதற்கு மறுமொழியாகப் பாடியருளியது இத்திருப்பதிகம். (ஐந்தாம் திருமுறை - தேவாரம் பக். 700, 701).

ஆனால், மேற்கண்ட பதிகத்தில் இடம்பெற்றுள்ள எந்தப் பாடலும் பெரியபுராணத்திலும் பதிகத்தின் விளக்கத்திலும் சொல்லப்பட்டவாறு சமணர்களோடு தொடர்புடைய எந்த ஒரு கருத்தையும் கொண்டிருக்கவில்லை.

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று தொடங்கக் கூடிய முதல் பாடல் சிவன் அடியவராக இருக்கக்கூடிய நாம் 'யாருக்கும் அடிபணிய மாட்டோம்' என்ற பொருள்கொள்ளும் தன்மையில் உள்ளதே தவிர, அது சமணர்கள் கூறக் கேட்டுச் சினம் கொண்ட மன்னனின் ஏவலாளரைப் பார்த்துக் கூறியது என்று பொருள் கொள்ளும் தன்மையில் இல்லை.

மேலும், அப்பதிகத்தின் இரண்டாவது பாடல் "சிறந்த ஆடையை உடுத்திப் பொன்னாபரணங்களைப் பூண்டு திரியும் தன்மையுடையவர்களின் சொற்களைக் கேட்க மாட்டோம். யாம் குற்றம் அற்றவரானோம்' என்றும், மூன்றாம் பாடல் 'யானையின் மீது இவர்ந்து வரும் அரசர்களின் சொற்களைக் கேட்க மாட்டோம். யாம் பற்றற்றவரானோம்' என்றும், ஐந்தாம் பாடல் 'சிறு தெய்வங்களைச் சார மாட்டோம் சிவபெருமானுடைய திருவடியே சேர பெற்றோம்' என்றும், ஆறாம் பாடல் 'சிவபெருமான், மும்மூர்த்திகளாகிய பிரமன், விட்டுணு, உருத்திரன் ஆகியவர்களின் தலைவர் ஆகியவர்; அட்டமூர்த்தியாய் விளங்குபவர்; முப்பத்துமூன்று வகையான தேவர்களுக்கும் அவர்களினும் மேலானவர்களுக்கும் தலைவராக விளங்குபவர். அப்பெருமானைச் செம்பவளத் திருமேனியுடைய சிவனே என்று ஏத்தும் திருத்தொண்டர்களே எம்மை ஆளும் தன்மை உடையவர்கள். *இச்சிறுபகுதிக்கு மன்னனாகிய பல்லவனே அன்றிப் பெருநிலமாகிய நாவலந் தீவுக்குத் தலைவர் எனக் கூறி வந்து ஒருவர் ஏவினாலும் நாம் ஏற்க மாட்டோம். எம்மிடம் கடுமையும் களவும் இல்லை"* என்றும் அதற்கு அடுத்த பாடலில் "மனம் கலங்கியவராகிப் பேய்க் குணம் உடையவர்கள் எது வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும். நாங்கள் பிழையற்றவர்கள்' என்றும், பதிகத்தின் இறுதிப் பாடலில் 'வா என்று எம்மை அழைத்து ஆள்வது தேவர்களின் தலைவராகிய சிவபெருமானே ஆவார். அப்பெருமான், பிரமனும் திருமாலும் காண்பதற்கு அரியவராகி, நெருப்புப் பிழம்பாகி ஓங்கியவர்; தேவாதி தேவர்; என் சிந்தையில் விளங்குபவர்; தென் திசைக்குத் தலைவனாகிய இயமன் தானே வந்து எம்மைக் குற்றேவல்


DOI: 10.5281/zenodo.13294268

செய்யுமாறு பணித்தாலும் அதனை ஒரு பொருட்டாகக் கொள்ள மாட்டோம். ஈசனுக்குரிய எண் குணங்களும் எம்மால் அமையப் பெற்றன' என உள்ளன.

ஆறாம் பாடலில் பல்லவன் மட்டுமல்ல வேறு எந்த அரசனுக்கும் தான் அடிபணிய மாட்டேன் என்பது பொதுவான முறையில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. மற்றபடி ஓர் இடத்தில்கூட சமணர்களின் ஏவலால் அனுப்பப்பட்ட மன்னனின் வீரர்கள் அவர்கள் மேல் கோபம் கொண்டு இவர் கூறியது என்று பொருள்கொள்ளும் வகையிலான தன்மையில் பாடலின் கருத்து இடம்பெறவில்லை.

மாறாக, இப்பதிகத்தின் எட்டாவது பாடலில்,

"...

நேசனை நித்தலும் நினையப் பெற்றோம்

நின்றுண்பார் எம்மை நினையச் சொன்ன

வாசக மெல்லாம் மறந்தோ மன்றே வந்தீரார்

மன்னவனா வான்றா னாரே" (ஆறாம் திருமுறை தேவாரம்.968)

என்று பொதுத்தன்மையில் படைவீரர்களைப் பார்த்துப் பேசுவது போன்ற தன்மையில் செய்தி மட்டும் ஓரிடத்தில் இடம்பெற்றுள்ளது. அதற்கடுத்து ஒன்பதாவது பாடலில் "... மான்தோலை மேலாடையாகக் கொண்டவர்; எம்மை அடிமையாக உடையவர்; உங்களோடும் மற்றும் உள்ளபடை வீரர்களையும் உடைய மன்னனின் பணியைக் கேட்டுப் பணிய மாட்டோம். நாம் எல்லாப் பற்றினையும் நீத்தவர்கள் ஆயினோம்." என்று படை வீரர்களைப் பார்த்துப் பேசுவதாக உள்ளது.

இந்த இரு பாடல்களிலும்கூட, சமணர்கள் பற்றி அல்லது சமணர்களுடைய ஏவலால் வந்த வீரர்கள் என்ற பொருள்கொள்ளும் வகையில் செய்தி இல்லை. இது ஒருபுறம் இருக்க இப்பதிகத்தில் இரண்டு இடங்களில் திருமால், பிரம்மன் அடிமுடி காணாதவர்கள். பெருமானே அனைத்துக் கடவுளுக்கும் தலைவன் என்றெல்லாம் சொல்லப்பட்டுள்ள நிலையில் சமணரைப் பற்றிய குறிப்பு இல்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்க ஒன்று.

**நாவுக்கரசர் முக்குறி பெற்றமை**

நாவுக்கரசர் நான்காம் திருமுறை - தேவாரம் - பதிகம் 109 திருத்தூங்கானை மாடம் (பென்னாகடம்) என்னும் திருத்தலம் குறித்துப் பாடப்பட்டது. திருநாவுக்கரசர் சூலம் இடபக் குறியைத் தனக்குப் பொறிக்குமாறு வேண்டியது என்று (நான்காம் திருமுறை தேவாரம் ப.778) கூறுகின்றது. 'சமண சமயத்துடன் தொடர்புடைய உடலுடன் நான் வாழப் பொறேன். நான் உயிர்வாழ உம் முத்திரையான சூலத்தையும் காளையும் ஆகிய சின்னத்தை என் தோளில் பொருத்திடல் வேண்டும்!" என்று வேண்டினார். ஒரு சிவ பூதம் ஒருவரும் அறியாமல் வந்து அவருடைய தோளில் சூலம். காளை ஆகிய சின்னங்களைப் பொறித்துச் சென்றது (பெரியபுராணம்.1415-1419)' என்று பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், 'பொன்னார் திருவடிக்கு...' என்ற பாடலில், "மேகம் சூழும் குளிர்ச்சி பொருந்திய கடத்தை என்னும் திருப்பெயர் கொண்ட தலத்தில் தூங்கானை மாடத்தில் மேவும் கடாக் கொழுந்தீசப் பெருமானே! தேவரீரின் பொன்னார் திருவடிக்கு விண்ணப்பம் ஒன்று உள்ளது. அதனை ஏற்று அருள் புரிவீராக என்னுடைய உயிரானது

தேவரீரைட் போற்றி செய்து வழிபடுவதற்குத் திருவுள்ளம் உடையதாயின் கூற்றுவன் என்பால் வாராது இருக்க, மின்னலைப் போன்று ஒளிரும் மூவிலைச் சூலத்தை என்மீது பொறித்து அருள்வீராக' என்றும், 'செந்தாமரைப் பூக்கள் விளங்கும் கடந்தையுள், தூங்கனை மாடத்துள் மேவும் ஈசனே! ஆஆ! இச்சிறிய தொண்டன் ஏதும் பெரிய அளவால் நினைத்து ஏத்திலன் என்று கருதி என்பால் உள்ள பிணியும் நோயும் தீர்த்தருளாது இருப்பின் தேவரீர்பால் பழியே நிலவும் அன்புடன் விரும்பி ஏத்துபவர்களுக்கு அருள்புரியும் தலைவனே! தேவரீரின் திருவடியாகிய திருநீற்றினை என்மேல் பூசி அருள்புரிவீராக' என்றும், 'தண்மையுடன் விளங்கும் சோலையும், சந்திரனை முட்டும் உயர்ந்த மாடங்களும் உடையகடந்தையுள், தூங்கானை மாடத்தில் வீற்றிருக்கும் ஈசனே! தேரினைத் தடுத்த கயிலையைப் பெயர்த்த இராவணனைத் திருவிரல் ஒன்றினால் நெரித்த தேவரீர் என்மீது இடபக் குறியைப் பொறித்து என்னை ஏற்றுக் கொள்வீராக (நான்காம் திருமுறை -தேவாரம் 1028-30). இவ்வாறு தனக்கு முக்குறிகளை வழங்குமாறு திருத்தூங்கானை மாடம் இறைவனிடம் வேண்டுவதாக நாவுக்கரசரின் பாடலில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு நாவுக்கரசர் பாடலில் கூறியுள்ளனவும் தேவாரம் பதிகவிளக்கம் மற்றும் பெரியபுராணம் கூறுவனவும் முரண்படுவதை அறிய முடிகின்றது. இதுவரை பார்த்ததைப் போல இங்கும் சமணர் பற்றிய குறிப்பு இல்லை என்பது தெளிவு.

**அப்பர் சமண உறவு பற்றிய அறிஞர்கள் கருத்து**

நாவுக்கரசர் சமணர் உறவுக்கான சான்றுகள் உள்ளன என்று கூறும் மறை. திருநாவுக்கரசு, 'அடிகளின் சமண சார்ந்தமைக்குள்ள அகச்சான்றுகளாகக் கருதத்தக்க அவர்தம் பாடல்கள் சிலவற்றை இங்குப் பார்ப்போம்.

"தந்தையார் தாயா ருடன்பி றந்தார் தாரமார் புத்திரர் தாந்தா மாரே
வந்தவர் றெங்ஙனே போமா றேதோ மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டாம்"
"எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார் எம்மாடும் சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவரில்லை சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்."
"மனைவிதாய் தந்தைமக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல் சூழ்நாகை மன்னுகா ரோணத்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே."
"முன்பெலாம் இளையகால மூர்த்தியை நினையாதோடிக்
கணகண விருமிநாளுங் கருத்தழிந்து அருத்தமின்றிப்
பின்பக லுணங்கலட்டும் பேதைமார் போன்றேனுள்ளம்
அன்பனாய் வாழமாட்டே னதிகைளி ரட்டனீரே."

என்ற பாடல்வரிகளைச் (பெரியபுராண ஆய்வுரை இரண்டாம் தொகுதி – அப்பர். ப.33) சான்று காட்டியுள்ளார். இப்பாடல்களில் எங்கும் நாவுக்கரசர் சமண சமயத்தில் இருந்தவர் என்பதை உறுதிப்படுத்தும் விதமான செய்திகளைச் சொல்லவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

சமணர் - சைவர் கொடுமை குறித்து மா.இராசமாணிக்கனார் இரண்டு செய்திகளைக் குறிப்பிடுகிறார்.

ஒன்று, திருநாவுக்கரசர் சைவராக மாறியவுடன் திகம்பர சமணர் அவருக்குச் செய்த கொடுமை. அதன் பிறகு சைவத்திற்கு மாறிய அரசன் சமணர்களுக்குச் செய்த கொடுமை. குறிப்பாக, சமணப் பள்ளிகளையும், பாழிகளையும் அழித்து குணதர ஈச்சரன் (திருவதிகை) உருவாக்கியது என்ற செய்தி.

இரண்டாவது, திகம்பர சமணர் சம்பந்தர் தங்கி இருந்த மடத்தில் நெருப்பிட்டு கொளுத்தினர். அதன் எதிரொலியாக சமணர்கள் ஏற்றம் நடந்தது. அது மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் சைவனாக மாறியபிறகு நிகழ்ந்தது என்கிறார். இந்த இரு செய்திகளைக் குறிப்பிடும் அவர், இவை நடந்தவையா? என்ற வினாவைத் தொடுத்து, 'கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின் பாடலில் இருந்த புகழ்பெற்ற சமணக் கல்லூரியைப் பற்றிய குறிப்பே காணப்படவில்லை. அச்சமணரும், பாண்டி நாட்டுச் சமணர் பலரும் கங்க நாட்டிற்குப் போய்விட்டனர்', 'சிலர் புதுக்கோட்டை சீமைக்குப் போய் விட்டனர்' என்ற வேறு இரு அறிஞர்களின் குறிப்புகளைச் சான்றுகாட்டி, 'இக்குறிப்புகளை நடுநிலையிலிருந்து ஆராயின், பெரியபுராணம் கூறும் மேற்சொன்ன செய்தி பொய்யெனக் கூறல் இயலாது. அப்பர் சமணரால் துன்புறுத்தப்பட்டவர் என்பதை அவருடைய பாடல்களே விளக்கி நிற்கின்றன. வேறு சான்று வேண்டுவதில்லை. குணதர ஈச்சரம் என்ற கோயில் இப்பொழுதும் திருவதிகையில் இருக்கிறது. அது மகேந்திரன் கட்டியதுதான் என்று அதன் தூள்களே சான்று பகர்கின்றன. தான் வேறு சமயத்தில் இருந்து சைவனாக மாறினான் என்பதனை மகேந்திரனே தன் கல்வெட்டில் அறிவித்துள்ளான். அவன் கொண்டிருந்த வேறு சமயம் சமணமே என்பதை சித்தன்னவாசல் ஓவியங்கள் மெய்ப்பிக்கின்றன.

சம்மந்தர் பதிகங்களை நன்கு ஆராயின், அவர் திகம்பர சமணரை மனமார வெறுத்தவர்; அவர்களால் சைவ சமயம் பாழாகியது என்பதை நம்பியவர் என்பன நன்கு வெளியாகின்றன. இராசராசன் காலத்தவரான நம்பியாண்டார் நம்பி தாம் பாடிய சம்பந்தர் பற்றிய பாக்களில் பல இடங்களில் சமணர் கழுவேற்றப்பட்டனர் எனபதைத் தெளிவாக விளக்கியுள்ளார்' (பல்லவர் வரலாறு, 254 - 55) என்ற செய்திகளைக் குறிப்பிடுகிறார்.

இவற்றில் ஒரு செய்தியை மட்டும் நாம் திடமாக தவறானது என்று மறுக்கலாம். அது சமணர் குறித்து திருநாவுக்கரசர் சொன்னதாகச் சொல்லப்படும் செய்தி. திருநாவுக்கரசரின் பாடல்கள் குறிப்பாக அவர் நோய் நீங்கிய திருவதிகையில் பாடிய 18 பதிகங்களில் மட்டுமல்லாது திருப்பாதிரிப்புலியூர், நமச்சிவாய பதிகம் முதலான பாடல்கள் எங்குமே அவர் சமணர் பற்றிய செய்தியைக் கூறவில்லை (என்பதை மேலே பார்த்தோம்) தெளிவாக அறிய முடிகிறது.

எனில், அவர் சமண சமயத்தில் இருந்து சைவத்திற்கு மாறினார் என்ற குறிப்பு அவருடைய பாடல்களில் எங்கும் இல்லை என்பது உண்மையாக இருக்கும்பட்சத்தில் பெரியபுராணம் அவர் சமண சமயத்தில் இருந்துதான் வந்தார் என்று கூறப்பட்டுள்ள செய்தியும் இணைத்து பார்க்க திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள் மற்றும் பெரியபுராணம் உருவான காலகட்டம் இந்த இரண்டுக்கும் இடையில் நாவுக்கரசரின் வாழ்க்கை பற்றிய கதை உருவான பின்னணி முக்கியத்துவம் வாய்ந்ததாக அறியப்படுகிறது. சமணர்கள் கொல்லப்பட்டது உண்மை. அந்தச் சமணர்கள் கொல்லப்படுவதற்குத் திருஞானசம்பந்தர் காரணமாக இருந்தார் என்பது உண்மை. சமணர்களைக் கழுவேற்றியதும், அனல் வாதம், புனல் வாதம் என்ற வாதங்களின் மூலம் தோற்கடித்ததும் என்பதும் மறுக்க இயலாதவை. ஆனால், நாவுக்கரசர் சமண சமயத்தின் போதாமை காரணமாக சைவத்திக்கு மாறினார் என்ற அந்த ஒன்று மட்டும் ஏற்க இயலாத ஒன்றாக உள்ளதையும் நாம் இந்த இடத்தில் நன்கு கவனிக்க வேண்டி உள்ளது.

**முடிவுரை**

திருவதிகை வீரட்டானத்தில் நாவுக்கரசருக்கு நோய் தீர்த்தல் குறித்து நாவுக்கரசர் தேவாரப் பாடல்களில் கூறப்பட்டுள்ளது. ஆனால், பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளவாறு சமண சமயத்தில் அவர் இருந்ததும், அங்கிருந்து மீண்டும் திரும்ப தமக்கையார் திலகவதியார் வேண்டுகோளுக்கு இணங்க சிவபெருமான் சூலைநோய் தந்து நீக்கி ஆட்கொண்டது என்பது இல்லை. அதற்கு மாறாக மனைவாழ்க்கை மற்றும் போகம் உயர்ந்தது என்றிருந்ததாக நாவுக்கரசரது தேவாரப் பாடல்கள் கூறுகின்றன. அதாவது, நாவுக்கரசர் சமண சமயம் சார்ந்திருக்கவில்லை என்பது நாவுக்கரசர் தேவாரப் பாடல்கள் தரும் செய்தி.

பெரியபுராணம் மற்றும் தேவாரம் பதிக விளக்கங்களில் கூறப்பட்டுள்ள நஞ்சு கலந்த உணவைத் தருதல், பட்டத்து யானையை வைத்து மிதிக்க முயலுதல், கல்லைக் கட்டிக் கடலில் போடுதல், நீற்றறையில் அடைத்தல் என்பன முதலான சமணர் உடனான நாவுக்கரசர் தொடர்பு பற்றிய எவ்விதமான குறிப்பும் நாவுக்கரசரது தேவாரப் பாடல்களில் கூறப்படவில்லை.

பொறாமை கொண்ட சமணர்களின் தூண்டுதலால் மன்னனால் கைது செய்ய அனுப்பப்பட்ட வீரர்களைப் பார்த்து நாமார்க்கும் குடியல்லோம் என்று பாடியதான குறிப்பு நாவுக்கரசர் பிற தேவாரப் பாடல்களில் கூறப்படவில்லை. ஆனால், நான் உண்மையான சிவனடியார் அதனால் இச்சிறு நாட்டை ஆளும் பல்லவ மன்னன் மட்டுமன்றி வேறு பெரு வேந்தனுக்கும் பணிந்து செல்ல வேண்டிய தேவை இல்லை என்று மட்டும் ஒரு பாடலில் சொல்லப்பட்டுள்ளது.

'சமண சமயத்துடன் தொடர்புடைய உடலுடன் நான் வாழ விரும்பவில்லை. நான் உயிர் வாழ வேண்டுமெனில் உம் முத்திரையான சூலத்தையும் காளையும் ஆகிய சின்னத்தை என் தோளில் பொருத்திட வேண்ட, ஒரு சிவபூதம் யாருக்கும் தெரியாமல் வந்து அவருடைய தோளில் சூலம், காளை ஆகிய சின்னங்களைப் பொறித்துச் சென்றது என்று பெரியபுராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், கூற்றுவன் என்பால் வாராது இருக்க மின்னலைப் போன்று ஒளிரும் மூவிலைச் சூலத்தையும், இடபக் குறியைப் பொறித்தும், என்னை ஏற்றுக் கொள்வீராக என்றும் உன்னை இன்னும் முழுமையாக ஏத்திலன் என்று கருதி நோயை முழுமையாக நீக்காமல் இருப்பின் திருவடியாகிய திருநீற்றினை என்மேல் பூசி அருள் புரிவீராக' என்றும் நாவுக்கரசர் தேவாரப் பாடல்களில் வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன.

ஒற்றை வரியில் சொல்வதானால் நாவுக்கரசர் சமணர் தொடர்பு பற்றித் தேவாரம் பாடல்களில் ஓரிடத்திலும் நாவுக்கரசரால் சொல்லப்பட வில்லை.

அப்படி இருக்க தேவாரப் பதிக விளக்கம் மற்றும் பெரியபுராணத்தில் அக்கதைகள் எவ்வாறு வந்து சேர்ந்தன என்று நாம் சிந்திக்க வேண்டி உள்ளது. அதாவது, மேற்கண்ட கதைகளும் அக்கதைகளின் பின்புல அரசியலும் குறித்து நாம் நுட்பமாகக் கவனிக்க வேண்டிய உள்ளது. அப்படிப் பார்க்க, நாவுக்கரசரின் ஆற்றலையும் அதற்குக் காரணமான சைவ மேம்பாட்டையும் மன்னன் உணர்ந்தான். சைவன் ஆனான். கேடு செய்த சமணர் அடங்கினர். மன்னன் நாவுக்கரசரிடம் வந்து வணங்கித் தன் குற்றங்களைப் பொறுக்க வேண்டும் என்றான். சமணரின் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துவிட்டு அவற்றின் கற்களைக் கொண்டு சென்று திருவதிகைப் பதியில் சிவபெருமானுக்குக் 'குணதர வீச்சரம்' என்ற கோயிலை எடுப்பித்தான் என்று பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ள குறிப்பின் பின்புலம் குறித்து நாம் வேறு புதிய கோணத்தில் நம் சிந்தனையை விரிவுபடுத்த வேண்டி உள்ளது. அப்படிப் பார்க்க,

1. அந்தணரான திருஞானசம்பந்தர், சுந்தரர், ஆதி சைவ மரபினரான மாணிக்கவாசகர் முறையே தந்தை மகன், தோழன், குரு சீடன் என இறைவனுக்கு அமைந்தனர் என்றும் வேளாளர் மரபில் பிறந்த திருநாவுக்கரசர் ஆண்டான் - அடிமையாக இருந்தார் என்ற 'சத்புத்ர தாச சக ஞான மார்க்கம் என்ற படிநிலை குறித்தும் நாம் கேள்வி எழுப்ப வேண்டி உள்ளது.
2. திருநாவுக்கரசர் சமணர் தொடர்பு இல்லாத நிலையில் அவரைப் பின்னால் வந்தவர்கள் தொடர்புபடுத்துவதன் உள்நோக்கம் குறித்து நாம் கவனம் செலுத்தவேண்டி உள்ளது.
3. ஆயிரக்கணக்கான சமணர்கள் கழுவேற்றம் செய்தததும் துரத்தியடிக்கப்பட்டதும் சமணப் பள்ளிகள் இடிக்கப்பட்டுக் கோயில்களாக மாற்றப்பட்டதும் (தேவாரம் பாடல்களிலும் மற்ற சான்றுகள்) என்ற குறிப்புகள் மேற்கண்ட படிநிலை குறித்துச் சிந்திக்க வாய்ப்பிருப்பதை உறுதிப்படுத்துகின்றன.
4. சமணர் பள்ளிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்பட்டதைப் பெருமிதங்களாக ஒருபுறம் சொல்வதும், சமணர்கள் கொடூரமானவர்கள் என்று சித்திரித்துக் கொன்று குவித்ததுமான செயல்பாடுகள் நடைபெற்றுள்ளமை உண்மையாக இருக்க, நாவுக்கரசருக்குச் சமணர் தொல்லைகள் பல கொடுத்தனர் என்று கதைகள் சொல்வதும் (தேவாரப்பாடல்களில் இல்லாத) அக்கதைகளின் பின்புல அரசியல் குறித்த உண்மையான நடுநிலையான மேலாய்வுகளின் தேவை காலத்தின் கட்டாயமாகின்றது.

**பயன்பட்ட நூல்கள்**

1. இராசமாணிக்கனார் மா., 2013 (மு.ப.), பல்லவர் வரலாறு, பாவை பப்ளிகேஷன், 142, ஜானி கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 600014.
2. இராமசுப்பிரமணியம், வ. த (உரை.ஆ.)., பன்னிரு திருமுறைகள் (தொகுதி 1, 4, 7, 9, 10, 20), 2009 (புதிய பதிப்பு), வர்த்தமானன் பதிப்பகம், 21 ராமகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை - 600017.
3. திருநாவுக்கரசு. மறை., 1974, பெரியபுராண ஆய்வுரை இரண்டாம் தொகுதி – அப்பர், மறைமலை அடிகள் பதிப்பகம், பி 96, சவகர் நகர், அகரம், பெரம்பூர், சென்னை - 82 .
4. நடேச கவுண்டர், & கவியரசு கு., 1972, அப்பர் (வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும்), தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், பிராட்வே, சென்னை -1
5. விமலானந்தம், மது.ச., 2021, தமிழ் இலக்கிய வரலாறு, முல்லை நிலையம், 9, பாரதி நகர் முதல் தெரு, தி.நகர், சென்னை - 600 017.
6. வெள்ளைவாரணர், க., 1972 (இ.ப.), பன்னிரு திருமுறை வரலாறு (முதற்பகுதி – முதல் ஏழு திருமுறைகள்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
7. வேங்கடசாமி மயிலை சீனி., சமணமும் தமிழும், 2006 (மூ.ப.) நாம் தமிழர் பதிப்பகம், தோப்பு வெங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.


DOI: 10.5281/zenodo.13294268